**செய்தி வெளியீடு எண் : 093** **நாள் : 12.01.2024**

**கோயம்புத்தூரில் உள்ள பெத்திகுட்டையில் வனஉயிரின மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம் அமைத்தல்**

கோயம்புத்தூர் வனக் கோட்டத்தில் உள்ள பெத்திகுட்டையில் ரூபாய் 19.50 கோடியில் மதிப்பீட்டில் மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம் அமைக்க தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இந்த மீட்பு மையம் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து காயமடைந்த, கைவிடப்பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்ட வன உயிரினங்களை மீட்பது, அறிவியல் ரீதியான முறையில் தனிமைப்படுத்தல், புனர்வாழ்வு மற்றும் மறுவாழ்வு செய்வதற்கான நெறிமுறைகளை தரப்படுத்துதல், மனித வனவிலங்கு மோதல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கான முக்கியத்துவம் வாய்ந்த மையமாக செயல்படும்.

வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் (1972) வனவிலங்குகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான கட்டமைப்பை வழங்குகிறது. மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு ஆகியவை வனவிலங்குகளின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்கான முக்கியமான நோக்கமாகும். அதிகரித்து வரும் உயிரியல் அழுத்தம் மற்றும் காலநிலை மாற்றத்தால், மனித வனவிலங்கு மோதல்கள் அதிகரித்துள்ள நிலையில் வனவிலங்குகளுக்கு தேவையான மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வழங்குவதற்கு நிபுணர்களைக் கொண்ட சிறப்பு மையங்களை அமைப்பது அவசியமாகிறது. மாநிலத்தில் வனவிலங்குகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவதில் தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது. இந்த நோக்கத்திற்காக, 53 ஹெக்டேர் பரப்பளவில் சிறுமுகையில் உள்ள மோயூர்–பெத்திக்குட்டை காப்புக் காட்டில் வனஉயிரினங்களுக்கான முதல் அதிநவீன மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம் அமைக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in